2018 ஜூன் 29]

ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

242—

இருபாலர் பள்ளியைப் பிரித்தல்

***35450—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் உள்ள இருபாலர் மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியென இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா ?*

(ஆ) *ஆம் எனில், எப்போது ?*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை அரசு இருபாலர் மேல்நிலைப் பள்ளியை பெண்களுக்காகத் தனியாகப் பிரித்து மேல்நிலைப் பள்ளி உருவாக்கப்படுமா என்ற ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. நேரடியாக மேல்நிலைப் பள்ளியைப் பிரிக்க இயலாது. ஏதேனும் ஒரு உயர்நிலைப் பள்ளி இருந்தால் அதை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு அடுத்த ஆண்டில் பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஈதல் இசைபட வாழ்தல்; அதுஅல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

ஏழைகளுக்குக் கொடுப்பதிலும், அதனால் புகழ்பெற்று வாழ்வதையும் தவிர வேறு எந்தப் பயனும் இப்பிறவியில் இல்லை என்னும் வான் புகழ் வள்ளுவர் கூற்றுக்கேற்ப, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து, வரலாறு படைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய புகழ்பாடி அவர்தம் இலட்சியக் கனவான எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற நிலையை தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் பெற்றுத் தந்திட அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஏதேனும் உயர்நிலைப் பள்ளி இருந்தால் அடுத்த ஆண்டிலே அதை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி தரப்படும் என்ற ஒரு நல்ல கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான காரணம் என்னவென்று கேட்டால், காரமடையில் அமைந்திருக்கின்ற மேல்நிலைப் பள்ளி, 1,600 மாணவ, மாணவிகள் பயின்று வருகிற பள்ளியாகும். இந்த அரசுப் பள்ளி மாணவர்கள் கடந்த 7 ஆண்டுகளாக 97, 98 சதவிகிதம் தேர்ச்சி பெற்று வருகின்றார்கள். அந்தப் பள்ளிக்கென 8 ஏக்கர் நிலம் இருக்கிறது. கட்டடங்களும் போதுமான அளவில் இருக்கின்றன. ஆகவே, இந்த இருபாலர் மேல்நிலைப் பள்ளியை, மாணவ, மாணவியர் தனித்தனியாக படிக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றி எதிர்வரும் காலக்கட்டத்தில் அப்பள்ளியை நிருவகிக்கச் சிறப்பாக இருக்குமென்று அங்கிருக்கின்ற பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, வருகிற கல்வியாண்டிலாவது இந்தப் பள்ளியை இரண்டாகப் பிரித்து, இருபாலரும் தனித்தனியே படிக்கின்ற மேல்நிலைப் பள்ளிகளாக உருவாக்கித் தரப்படும் என்று கூறியமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய

2018 ஜூன் 29]

நெஞ்சார்ந்த நன்றியினை மீண்டும் ஒரு முறை தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார். அடுத்த கேள்வியில்லை. (குறுக்கீடு) இருக்கிறதா? அதற்குள் நன்றி சொல்லிவிட்டார். மாண்புமிகு உறுப்பினர், அடுத்த கேள்வியையும் சேர்த்துக் கேளுங்கள். ஏதாவது கேள்வியிருந்தால் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகராட்சி, சங்கர் நகரில் அமைந்திருக்கின்ற பகவான் மஹாவீர் நகரவை நடுநிலைப் பள்ளி 250 மாணவ, மாணவிகளைக் கொண்டு தற்போது இயங்கி வருகிறது. அந்தப் பள்ளி நகராட்சியினுடைய கடைக்கோடியில் இருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து உயர் கல்விக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த மாணவர்கள் சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நகர மேல்நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால், அந்த மஹாவீர் நகரவை நடுநிலைப் பள்ளியை இந்த ஆண்டிலேயே உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சங்கர் நகரில் இருக்கும் மஹாவீர் நகரவை நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கும் கடிதம் எனக்கு வந்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுக்கு, இந்த ஆண்டு O.K. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் நகராட்சி 24 வார்டுகள் உள்ள பகுதியாகும். இங்கு கிட்டத்தட்ட 35,000-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். துறையூர் நகரில் 10 வார்டுகளுக்குமேல் slum area ஆக இருக்கின்றது. இந்தப் பகுதிகளில் பின்தங்கிய மக்கள் அதிகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மட்டுமே உள்ளது. துறையூர் நகரில், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கிடையாது. எனவே, துறையூர் நகரில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை இந்த ஆண்டு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துறையூர் நகரில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆண்கள் மேல்நிலைப் பள்ளி உருவாக்கப்படுமா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். படிப்படியாகத்தான் ஒரு பள்ளியை உருவாக்க முடியும். அந்தப் பள்ளியை நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, அதற்குப் பிறகு மேல்நிலைப் பள்ளி என்ற வகையில் உருவாக்க முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதங்கள் மூலமாக தன் கோரிக்கையை அரசுக்குத் தருவார்களேயானால், அதுகுறித்து அரசு பரிசீலித்து, என்ன நடவடிக்கையை எடுக்க முடியுமோ, அந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜியகுமார் அவர்கள்.

திரு. கே.எஸ். விஜியகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காகவே நான்’ என்று தன் வாழ்நாளை அர்ப்பணித்து, தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளோடு தன் வாழ்நாளை அர்ப்பணித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூன் 29]

அந்த நல்லாட்சியை சீரோடும், சிறப்போடும் இன்று வழிநடத்துகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறையை பற்றி பொன்னெழுத்துகளால் எழுத வேண்டிய அளவுக்கு ஒரு காலச் சூழ்நிலையை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்கி வழிநடத்திக் கொண்டிருக்கிறார். திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியிலிருக்கின்ற கவரப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 2,800 மாணவ, மாணவியர் பயின்று வருகிறார்கள். அந்தப் பள்ளியை அதாவது, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியெனவும், பெண்களுக்குத் தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளியெனவும் பிரித்துத் தர வேண்டுமென்று அந்தப் பள்ளியில் இயங்கிக்கொண்டிருக்கும் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் பலர் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதற்கான போதிய கட்டடங்களெல்லாம் இருக்கின்றன. கவரப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியானது, திருவள்ளூர் மாவட்டத்திலேயே அதிக மதிப்பெண்களையும், பல விருதுகளையும் பெற்றிருக்கிறது. அந்தப் பள்ளியை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி எனத் தனித்தனியாக பிரித்து அமைக்க மேலும் கட்டடங்கள் தேவையென்றாலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுப்பதற்கு நானும் தயாராக இருக்கின்றேன். அந்தப் பள்ளியை இந்தக் கல்வி ஆண்டிலேயே அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாகவும் அதேபோல் அரசு விதிகளுக்குட்பட்டு, இந்த ஆண்டே பெண்களுக்கென உயர்நிலைப் பள்ளியாகவும் பிரித்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தப் பள்ளியை ஆண்களுக்கெனவும், பெண்களுக்கெனவும் தனித் தனிப் பள்ளிகளாகப் பிரித்துத் தர வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்.*

பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளியாக இந்த ஆண்டு மாற்றித் தரப்படுமா என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அது பற்றி இந்த ஆண்டே அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

243—

கொப்பரை கொள்முதல் மையங்கள்

***8393—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மடத்துக்குளம் தொகுதியில் கொப்பரை கொள்முதல் மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2016 ஆம் ஆண்டிற்கான ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் 15-6-2016 முதல் 30-11-2016 வரை தமிழ்நாட்டில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நடைபெற்றது. தற்போது கொப்பரைத் தேங்காய் கொள்முதல் ஏதும் நடைபெறாத நிலையில், மடத்துக்குளம் தொகுதியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. எனினும் தென்னை விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வந்தால், உரிய நேரத்தில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் அரசாணைகளுக்குட்பட்டு மடத்துக்குளம் தொகுதியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையங்கள் அமைப்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*